**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.04.2026**
**RLTOP. No.3/2023**
**வழக்கு சாட்சி RW.1– மனோகரன், த/பெ.ஸ்ரீராமுலு**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

4) நான் இதற்கு முன்பு சாட்சியம் அளித்தபோது மனுதாரர் விஜயா என்பவருக்கும், ஷேக்முகம்மது கவுஸ் என்பவருக்கும் போகியத்திற்கு விட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது இரண்டுமே வீடுகள் என்றால் சரிதான். நான் கடை நடத்தி வரும் இடமானது 10X10 என்றால் சரிதான். பிரியா என்பவர் மனுதாரர் அன்பழகனின் மனைவி ஆவார். என் எதிர்உரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் மனுதாரர் மற்றும் அவரது மனைவி என்னிடம் நகை எதுவும் அடைமானம் வைக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். லட்சுமி கோல்டு லோன் பைனான்ஸ் என்பது என்னுடைய கடைதான் என்றால் ஆமாம்.

5) என்னிடம் காட்டப்படும் லட்சுமி கோல்டு லோன் பைனான்ஸ் என்ற பெயரிட்ட ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் இல்லை. 21.09.2010 ல் ரூ.65000/– மனுதாரர் மனைவி என்னிடம் பெற்றுக்கொண்டு 40 கிராம் தங்க நகையை என்னிடம் அடமானம் வைத்துள்ளார் என்றும், 28.02.2008 ல் 53 கிராம் தங்க நகையை அடமானம் வைத்து ரூ.40000/– என்னிடம் பெற்றுள்ளார்கள் என்றும் அதற்கு நான் ரசீதும் கொடுத்துள்ளேன் என்றும், வழக்கிற்காக வேண்டி ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கடைக்கு அடமானம் வைப்பதற்கு ரசீது வழங்குவேனா என்றால் வழங்குவேன்.

6) என் கடையின் உரிமம் எண் என்னவென்றால் 1/2001 ஆகும். என்னுடைய வீட்டின் முகவரி 25, மாடி லைன் சேலம்கேம்ப், மேட்டூர் அணை –56 என்றால் சரிதான். லட்சுமி என்பவர் என் மனைவி ஆவார். நான் கொடுத்துள் ரசீதின்படியே 2010 வரை சேலம்கேம்பில்தான் நான் கடை வைத்து நடத்தி வந்துள்ளேன் என்றால்

சரியல்ல. 2001ல் இருந்தே நான் மனுசொத்தில்தான் கடை வைத்து நடத்தி வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றும், உரிமம் 2001ல் பெற்றதிலிருந்தே நான் அங்குதான் உள்ளேன்.

7) நான் மனுசொத்தில் கடை வைத்துள்ளதற்கு ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளனோ என்றால், உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, வேண்டுமென்றால் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். முதன்முதலில் 2010ல் தான் தாவா சொத்தில் நான்கடை வைத்தேன் என்றும், முன்பணமாக ரூ.20 ஆயிரமும் மாத வாடகை ரூ.2500/- ம் செலுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. பின்னர் 2013ல் ரூ.5000/- ஆக வாடகை உயர்த்தப்பட்டு 2017 வரை செலுத்தினேன் என்றால் சரியல்ல.

8) 2017ல் மனுதாரர் அன்பழகனின் மனைவிக்கு வேலை கிடைத்தது என்றால் விவரம் தெரியும், வருடம் தெரியாது. வேலை கிடைத்தவுடன் குடும்பத்துடன் சேலத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால், சரிதான். அந்த சமயத்தில் அவர்கள் வீட்டில் இருந்த வங்கி கணக்குபுத்தகம், காசோலை ஆகியவற்றை துர்லாபம் அடைவதற்காக எடுத்துக்கொண்டு மனுதாரருக்கு எதிராக பொய் வழக்குகள் கொடுத்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

9) நான் குடியிருப்பது சேலம்கேம்ப் என்றும், கடை வைத்துள்ளது தங்கமாரிபட்டினம் என்ற நிலையில், பவானி நீதிமன்றத்தில் மனுதாரர் மீது தவறான விலாசத்தை கொடுத்து 2 காசோலை வழக்கு தாக்கல் செய்து அவருக்கு கிட்னி பெயிலியர் ஆனது தெரிந்தும் வேண்டுமென்றே தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எப்போதிலிருந்து வாடகை கொடுக்கவில்லை என்றால் இதுநாள் வரை ரூ.1000/- வாடகை கொடுத்து வருகிறேன்.

10) நான் வாடகை கொடுத்து வருவதாக என் எதிருரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் என்னுடைய வேண்டுகோளாக ரூ.20 லட்சமும் அதற்குண்டான வட்டியும் கொடுத்தால் மனு சொத்தை காலி செய்து தருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 காசோலைகளும் 2012 காலகட்டத்திற்குரியது என்றால் எனக்கு தெரியவில்லை, அந்த

காசோலைகளை தான் மனுதாரர் கொடுததார். நானோ, என் மனைவியோ வருமானவரி செலுத்தி வருகிறோமா என்றால் இல்லை. மனுதாரர் அடமானம் வைத்த நகையையும் நான் 3ம் நபருக்கு விற்றுவிட்டேன் என்றும், அவரது வீட்டில் இருந்து எடுத்த காசோலைகளை வைத்து பொய்யான வழக்கும் தாக்கல் செய்துள்ளேன் என்றும், என்னுடைய ஒரே குறிக்கோள் அந்த மனுச்சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறான செயல்களை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாடகை கொடுக்காத காரணத்திற்காக மனுசொத்தை காலி செய்து மனுதாரர் வசம் ஒப்படைக்க நான் கடமை பட்டவர் என்றால் சரியல்ல. வாடகை கொடுத்து தான் வருகிறேன்.

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.